சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.22/2023

பெயர். திருமதி. சரண்யா க /பெ. மணிகண்டன் நாள். 24.10.2025

**எதிர்மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) திருமணத்திற்கு பிறகு மனுதாரர் வீட்டில் நான் வசித்து வந்தேன். மனுதாரர் வீட்டில் சுமார் எட்டு மாதங்கள் இருந்தேன். அதன் பிறகு எனக்கு சீமந்தம் நடந்தபிறகு என் தாய் வீட்டிற்கு சென்றேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எனக்கு ஒன்பதாம் மாதம் சீமந்தம் நடத்தினார்கள். எனக்கு குழந்தை பிறந்த பிறகு மூன்றாவது மாதம் மனுதாரர் வீட்டிற்கு சென்றேன். அதன் பிறகு குழந்தைக்கு ஒன்பது மாதம் ஆன பின்பு சென்றேன். மனுதாரர் எதனால் என்னுடன் வாழ இயலாது என்றால் என் வாய் கோனலாக உள்ளதால் மனுதாரர் என்னுடன் வாழ இயலாது என்று கூறினார். எப்பொழுது பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் குழந்தை பிறந்து மூன்றாவது மாதம் மனுதாரர் வீட்டிற்கு சென்றபொழுது என்னை செருப்பால் அடித்து விரட்டிய பொழுது பஞ்சாயத்து நடைபெற்றது. மேற்கண்ட விவரத்தை எதிருரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

2) குழந்தை பிறந்து மூன்றாவது மாதம் மனுதாரர் வீட்டிற்கு பேச சென்றதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். 2 ம் முறையாக பேச சென்றபோது யார் யார் சென்றோம் என்றால் என் இரண்டு சித்திகள், நான் மற்றும் என் குழந்தை. தேதி, வருடம் ஞாபகம் இல்லை. பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையததிற்கு தகவல் யார் கூறியது என்றால் மனுதாரர் வீட்ல் தான் கூறினார்கள். மனுதாரர் வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு 7.00 மணிக்கு

சென்றோம். அவ்வாறு பேச போனதாக தகவல் கூறினோமா என்றால் வாழ்வதற்காக தான் சென்றேன்.



அவ்வாறு தகவல் கூறினேன். அவ்வாறு தகவல் கூறினேன் என்றால் எனக்கு தெரிந்த குமார் என்பவரிடம் தகவல் கூறினேன். மேற்கண்ட விவரத்தை எதிருரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் வாழப்போவதாக சொல்லியுள்ளேன்.

3) நான், என்னுடைய இரண்டு சித்தி ஆகியோர் மனுதாரருடன் பிரச்சனை செய்வதற்காகதான் சென்றோம் என்றால் சரியல்ல. உண்மையில் மனுதாரருடன் சேரந்து வாழும் எண்ணம் இருந்திருந்தால் என் பெற்றோருடன் பகல் நேரத்தில் சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட பிரச்சனைக்கு முன்பே நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்கண்ட பிரச்சனை சம்மந்தமாக நான் புகார் ஏதும் அளிக்கவில்லை. அந்த புகாரின்பேரில் விசாரித்தார்களா என்றால் மனுதாரர் தன் ஊரில் இறப்பு என்பதால் விசாரணைக்கு வரவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மனுதாரர் விசாரணைக்கு ஆஜரானார் என்றாலும், நான்தான் மனுதாரருடன் சேரந்து வாழ மாட்டேன் என்று எழுதி கொடுத்துவிட்டு சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல.

4) மனுதாரரின் தகப்பனாரை நான் செருப்பால் அடித்தேன் என்றாலும், அதுவரை மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமாக இருந்ததார் என்றாலும், அதன் பின்புதான் மனுதாரர் என்னுடன் வாழ விரும்பவில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர் மற்றும் அவரது பெற்றோரை நான் சரிவர பராமரிக்காமலும், உணவு கொடுக்காமலும் இருந்துவந்தேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் தன் மூத்த சகோதரரின் மகளை தூக்கும்பொழுது அவரது அண்ணியை வைத்து தவறான உறவு குறித்து பேசி வந்தேன் என்றால் சரியல்ல. மனுதாரர் வீட்டில் எனக்கு ஒதுக்கப்பட்ட அறையை விட்டு வெளியே வந்ததில்லை என்றால்

சரியல்ல. பல முறை நான் மனுதாரருடன் சண்டை போட்டு என் தாய் வீட்டிற்கு சென்றுவிடுவேன் என்றால் சரியல்ல. என்னுடைய எதிருரை மற்றும் முதல் விசாரணையில் என் கணவருடன்



சேர்ந்து பேச விட்டதில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குதுநநடிம பிறந்து 9 மாதத்திற்கு பிறகு என் தகப்பனார் பல முறை பஞ்சாயத்து பேசினார். அதில் மனுதாரர் என் வாய் கோனாலாக இருப்பதால் என்னுடன் சேரந்து வாழ ஒத்துழைக்கவிலலை.

5) காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. காவல்நிலையத்தில் பிரிந்து வாழ்வதாக எழுதி கொடுத்துவிட்டேன் என்றாலும், அதனால் தான் புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவிலலை என்றாலும் சரியல்ல. மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு நான் எவ்வித முயற்சியும் செய்யவிலலை என்றாலும், நீதிமன்றத்தில் எவ்வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் சேர்ந்து வாழும் எண்ணம் இருந்திருந்தால் மனு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. ஜீவனாம்சம் பெறுவதற்காக சேர்ந்து வாழ தயாராக உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள அனைத்தும் பொய் என்றால சரியல்ல. நான் எக்காலத்திலும் மனுதாரருக்கு மனைவியாக வாழ்ந்ததிலலை என்றால் சரியல்ல. மனுப்படி தீரப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. எதிருரையில் கோரியுள்ள நிவாரணங்கள் எனக்கு கிடைக்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.